செய்தி வெளியீடு : 642 நாள் 08.12.2015

**மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 07.12.2015 வரை 12,510 முகாம்கள் மூலம் 15,55,447 நபர்கள் சிகிச்சை அளிக்கப்பட்டு பயனடைந்துள்ளனர். 14,047 நபர்கள் மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்! மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் தகவல்!**

**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணைப்படி, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் சுகாதாரம் பேணி காக்கும் வகையில் தொடர்ந்து மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு பொது மக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதில் 07.12.2015 வரை சென்னை மாநகராட்சியுடன் இணைந்து 5,116 மருத்துவ முகாம்களில் 8,53,412 நபர்கள் சிகிச்சை பெற்று பயன் அடைந்துள்ளனர். மருத்துவக் கல்வி இயக்ககம் மூலம் 461 முகாம்களில் 69,518 நபர்கள் சிகிச்சை பெற்று பயன் அடைந்துள்ளனர், இந்திய முறை மருத்துவத்துறையின் சார்பில் 535 முகாம்கள் நடத்தப்பட்டு 1,43,313 நபர்கள் சிகிச்சை பெற்று பயன் அடைந்துள்ளனர், பொது சுகாதாரத்துறை இயக்ககம் மூலம் 1,472 முகாம்கள் நடத்தப்பட்டு 2,12,609 நபர்கள் சிகிச்சை பெற்று பயன் அடைந்துள்ளனர், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகள் சார்பில் 4,926 முகாம்கள் நடத்தப்பட்டு 2,76,595 நபர்கள் சிகிச்சை பெற்று பயன் அடைந்துள்ளனர். ஆக 07.12.2015 வரை நடைபெற்ற 12,510 சிறப்பு வெள்ள நிவாரண மருத்துவ முகாம்கள் மூலம் 15,55,447 நபர்கள் சிகிச்சை பெற்று பயன் அடைந்துள்ளனர் இவற்றில் 14,047 நபர்கள் மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளனர் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**